[11th July 1962

சின்னாறு, தொப்பையாறு திட்டங்கள் (சேலம் மாவட்டம்).

* 245 கேள்வி.—திரு. மீ. கலியாணசுந்தரம் :
திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : } கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள சின்னாறு, தொப்பையாறு திட்டங்கள் பி. பட்டியலில் வைத்துள்ளதை ஏ. பட்டியலுக்கு மாற்றி வேலை துவக்கம் செய்ய வட சேலம் மாவட்ட மன்றத்தின் கோரிக்கை வந்ததா ?

(இ) அப்படியானல், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) It has not been found feasible to include the schemes in the Third Five-Year Plan.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சின்னாறு, தொப்பையாறு ஆகிய இரண்டு நதிகளும் மேட்டூர் ஏரியில் போய் விழுவன என்றாலும் இவைகளினால் சாதாரண காலங்களில் மேட்டூர் ஏரிக்கு அதிகமாகத் தண்ணீர் கிடைக்க முடியாது. மழை பெய்தால்தான் தண்ணீர் போய்ச் சேரும். ஆகவே, வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் இந்த நதிகளில் அணை கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. வி. ராமையா : அந்த அறிக்கையைக் கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கவேண்டுமென்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன் .

யூகலிப்டஸ் மரங்கள் (வளர்த்தல்).

* 246 கேள்வி—திரு. முனு. ஆதி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டத்தில் எத்தனை காடுகளில் யூகலிப்டஸ் மரங்கள் வளர்க்கப்படுகின்றன ?

(இ) இதுவரை எத்தனை மரங்கள் எவ்வளவு செலவில் வைக்கபட்டுள்ளன ?

(உ) இதன் பராமரிப்பிற்காக ஆகும் செலவு என்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (அ) 390 acres have been brought under Eucalyptus hybrid plantations.

(இ) Eucalyptus trees have been raised at the rate of about 360 trees per acre. The average cost worked out to Rs. 70 per acre.

(உ) These plantations were maintained at a cost of Rs. 17 per acre during the three years subsequent to their raising.

MR. SPEAKER : Questions are over.